**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.333/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : பிரியாதங்கம் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : ராஜூ | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் விளங்குளத்தூர் சுப்பிரமணியபுரத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களில் 1ம் எதிரி எனது கணவர். 2ம் எதிரி எனது கணவரின் தம்பி ஆவார்கள். எனக்கும், அவர்களுக்கும் இடையே எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது. அதனால் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து என்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கும், 1ம் எதிரிக்கும் திருமணமாகி எதிரி என்னை சரிவர பராமரிக்காமல் இருந்து வந்தார் என்றாலும், என்னை சந்தேகப்பட்டு சண்டை போட்டு வந்தார் என்றாலும் 08.11.2024ம் தேதி மாலை 04.00 மணியளவில் நானும், எனது அம்மா திலகவதியும் எங்கள் வீட்டின் முன்பு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரியின் தாயார் 1ம் எதிரியிடம் வேலைக்கு போகாமல் இருக்கிறாய் என்று கேட்டபோது எதிரிகள் இருவரும் சேர்ந்துகொண்டு அவ்வாறு 1ம் எதிரியின் தாயார் கேட்பதற்கு நான் தான் காரணம் என்றுசொல்லி என்னை ஆபாச வார்த்தைகளால் பேசி என்னை தாக்கி காயப்படுத்தினார்கள் என்றாலும், இதைபார்த்த எனது தாயார் என்னை காப்பாற்றக்கூறி கத்தியவுடன் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வந்து சண்டையை விலக்கியபோது எதிரிகள் என்னை பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாக புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.333/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : திலகவதி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : போஸ் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் விளங்குளத்தூர் சுப்பிரமணியபுரத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அசா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களில் 1ம் எதிரி எனது மருமகன். 2ம் எதிரி எனது மருமகனின் தம்பி ஆவார்கள். எனது மகளும், மருமகனும் நல்லபடியாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களிடையே பிரச்சனை எதுவும் இல்லை. எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கியதாகவும், எதிரிகள் அசா.1 யை

ஆபாசமாக பேசி அவரை தாக்கி அவருக்கு காயம் ஏற்படுத்தியதையும், அவரை கொலைமிரட்டல் விடுத்ததையும் பார்த்து தெரிந்துகொண்டு போலிசார் விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.333/2025
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : செல்வி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : உடையார் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் விளங்குளத்தூர் சுப்பிரமணியபுரத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அசா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் உறவினர்கள் ஆவார்கள். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்து சண்டையை விலக்கியதாகவும், எதிரிகள் அசா.1 யை ஆபாசமாக பேசி அவரை தாக்கி அவருக்கு காயம் ஏற்படுத்தியதையும், அவரை கொலைமிரட்டல் விடுத்ததையும் பார்த்து தெரிந்துகொண்டு போலிசார்

விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.333/2025
Prosecution witness.04

பெயர் : சந்திரசேகரன் தொழில் :

தந்தை/கணவர் பெயர் : ஆறுமுகம் கிராமம் :

வயது : தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் தற்போது சுப்பிரமணியபுரத்தில் குடியிருந்து கேட்டிரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு நான் மாலை 05.00 மணிக்கு எனது வீட்டில் இருந்தபோது போலிசார் ஏதோ வழக்கு விசாரணை என்று கூறி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக என்ற விபரம் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 09.11.2024 ம் தேதி 17.17 மணியளவில் நானும், முனியசாமி என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது முதுகுளத்தூர் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தபோது சாட்சியாக இருந்து பார்வை மகசரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.